**லங்கா லேலன்ட் (தனியார்) கம்பனி – 2023/2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா லேலன்ட் (தனியார்) கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்,முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடெனபது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

| | குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திற்குப் பதிலாக ரூபா 353,381,044 ஆன வரிக்குப் பின்னரான இலாபம் கருத்திற் கொள்ளப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பு ரூபா 2,431,508 ஆல் உண்மையான செலுத்தப்பட்ட வரிப் பெறுமதி ரூபா 2,427,306 குறைக்கப்பட்டு வேறுபாடான ரூபா 4,122 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உருவாக்கப்பட்ட காசப் பாய்ச்சலொன்றாக சீராக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் திரத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் இலாபத்தின் அடிப்படையில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 6,428,125 ஆன பெறுமதி காசு வெளிப்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பு இலக்கம் 04 இன் கீழ் ரூபா 6,428,125 நிதி வருமானத்தின் கீழும், | காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்ட நிர்வாகச் செலவுகளின் கீழ் ரூபா 6,428,125 உம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது நிதிக்கூற்றுக்களில் பாதிப்பொன்றை ஏற்படுத்த மாட்டாது. | |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் இலாபத்தின் அடிப்படையில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 6,428,125 ஆன பெறுமதி பங்கிலாபமாக கணக்கீடு செய்யப்படாததுடன் நிர்வாகச் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளவில்லை. காசுப் பாய்ச்சல் கூற்றின் சீராக்கத்தில் பங்கிலாப வருமானமாக ரூபா 6,428,125 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் நிதி நடவடிக்கைகளின் கீழ் ரூபா 6,428,125 வெளிப்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் பாதிப்பொன்றை ஏற்படுத்த மாட்டாது. | இந்த பங்கிலாப கொடுப்பனவு உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | 1997 யூலை 14 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திர இலக்கம் 97/4111/13/011 இன் பிரகாரம் கம்பனியின் 58 ஏக்கர் காணி கைத்தொழில் பேட்டை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கைத்தொழில் பேட்டையொன்று அமைப்பதற்காக கைத்தொழில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்த நிலத்திற்கான சட்டப்பூர்வ உரிமை அல்லது வதிதிட உரிமை கம்பனிக்கு காணப்படாதபோதிலும் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் ருபா 626,473 ஆன பெறமதிக்கு இக்காணி நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். இதற்கு முன்னர் இருந்த கட்டுப்பாட்டு அதிகார சபையின் மூலம் மேற்படி நிலம் தொடர்பான எந்தத் தகவலையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. கம்பனி செயலாளர் தொடர்பாக சட்ட நடவடிக்கையொன்றும் உள்ளது. மேலும் இப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்களில் நீண்ட காலமாக காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தும் எழுத்து மூலமான சான்று நிறுவனத்திடம் இருத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்**

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பணிக்கொடைக் கொடுப்பனவு | 1,514,896 | அட்டவணை | ஏற்றுக் கொள்கின்றேன். இது தொடர்பான எவ்வித துணை ஆவணமொன்றும் இதற்கு முன்னர் இருந்த கட்டுப்பாட்டு அதிகார சபையிடமிருந்து பெறப்படாததுடன் இதற்கான வழக்கு நடவடிக்கையொன்றும் உள்ளது. வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நிர்வாகத்தின் முடிவுகளின் அடிப்படையில் பொருத்தமான சீராக்கங்கள் எதிர்காலத்தில் செய்யப்படும். | பணிக்கொடை ஒதுக்கீடு தொடர்பான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயல்திறன் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். வருடாந்த செயல்திறன் அறிக்கை தயாரிக்கப்படவில்லை. தற்போதைய நிர்வாகம் மூன்று செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுததுவதற்கு எதிர்பார்த்திருப்பதுடன் செயற்திட்டங்களின் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் செயல்திறன் அறிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த செயல்திறன் அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | | | |
| (i) 131(1) ஆம் பிரிவு | கம்பனியால் வருடாந்த அறிக்கையொன்று ஒவ்வொரு வருடமும் | இதற்கு முன்னர் இருந்த கட்டுப்பாட்டு அதிகாரசபையால் இப்பணி செய்யப்படாததுடன் | கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் இந்த பிரிவின்படி வருடாந்த அறிக்கையொன்றை கையளிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய அதிகாரசபையால் எதிர்காலத்தில் சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 132 ஆம் பிரிவு | வருடாந்த அறிக்கையுடன் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டிய பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் பணிப்பாளர் மற்றும் கம்பனியின் செயலாளர் கையொப்பமிட்ட சான்றிதழ் 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை கம்பனியின் பணிப்பாளர் சபையின் மாற்றங்கள் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை க்கான காரணம் கம்பனியின் முன்னாள் பணிப்பாளர் பொதுத் திறைசேரியின் பிரதிநிதி முறையாக தனது இராஜினாமாவை சமர்ப்பிக்காமையே ஆகும். | கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 01/2021 ஆம் இலக்க 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் கையேடு | | | |
| (i) | 2.3 ஆம் பிரிவு | கம்பனியின் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத்திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மிளளாய்வாண்டில் கம்பனியின் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத்திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவில்லை. | கம்பனியின் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத்திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் போன்ற அனைத்த திட்டங்களும் தயாரிக்கப்பட்டு கைத்தொழில் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | (ii) | 6.6 ஆம் பிரிவு | • நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் வரைவு வருடாந்த அறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 30 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் வரைவு வருடாந்த அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை<br><br>• நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் திருத்தப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிர்வாக சபையினால் கம்பனியின் நோக்கங்களை அடைவதற்காக கடந்த சில வருடங்களாக எந்தவொரு செயற்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கடந்த 06 வருட காலப்பகுதியில் பெறப்பட்ட நிலையான வைப்புத்தொகை வட்டி வருமானம் மற்றும் பங்குகளுக்காக பெறப்பட்ட பங்கிலாப வருமானம் ஆகியவற்றிலிருந்து ரூபா 31,621,843 நிர்வாகச் செலவுகளாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். புதிய நிர்வாகத்தின் கீழ், 3 புதிய செயற்திட்டங்கள் அறிமகப்படுத்தப்படுட செயல்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் முதல் இரண்டு செயற்திட்டங்களுக்கான சாத்தியக்கூறு ஆய்வொன்ற நடாத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, அதன் மூலம் | நிறுவனத்தின் நோக்கங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கிடைக்கும் வருமானத்தின் மூலம் நிறுவனத்தின் எதிர்காலத்தில் நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 353,381,044 நட்டமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 55,368,643 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 408,749,687 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு பங்கு விலைகள் அதிககரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

2024 ஆம் ஆண்டில் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது தொடர்புடைய கம்பனிகளில் முதலீட்டின் நியாயமான பெறுமதியின் (Fair Value gain on investment in Associate) அதிகரிப்பு ரூபா 427 மில்லியன் ஆகும்.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 20.36 ஆக இருந்ததுடன் அது முன்னைய வருடத்தின் விகிதமான 19.41 உடன் ஒப்பிடும்போது உயர்ந்த மதிப்பொன்றை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**3.1 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 3 செயற்திட்டங்களுக்கு ரூபா 93,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அப்பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் இரண்டு செயற்திட்டங்கள் கம்பனியின் செயற்பாடுகளுக்கு உரித்தற்ற செயற்திட்டங்கள் என்பதும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளவில்லை. 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் அதிகாரங்களை மீறி செயற்படுகின்ற விதி முற்றாக நீக்கப்பட்டுள்ளமையால் கம்பனியின் பணிப்பாளர் சபை விரும்பும் எந்த வணிகத்திலும் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | கம்பனி அதன் அமைப்பு புறவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு இணங்க வேண்டும். |

**3.2 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01/2021 ஆம் இலக்க 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் கையேட்டின் 4.2(ஏ) பிரிவு ஒவ்வொரு 03 மாதங்களுக்கொரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் மீளாய்வாண்டில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். திறைசேரியின் பிரதிநிதியொருவர் இல்லாமையால் இந்த நிலைமை ஏற்பட்டதுடன், மீண்டும் திறைசேரியின் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்ட திகதி முதல் திட்டமிட்டபடி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |